2008 மே 6]

205—

இராஜகோபுரம்

***30302—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.86.50 இலட்சம் மதிப்பீட்டில், 7 நிலை இராஜகோபுரம் கட்டும் பணி நடவடிக்கையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் அமைந்திருக்கின்ற அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த திருக்கோயில். நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்ற அந்தத் திருக்கோயிலுக்கு மாசி மாதத் திருத்தேர் திருவிழாவன்று தமிழகத்திலேயிருந்து ஏறத்தாழ இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்றனர். அம்மாவினுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் 12-11-2005 அன்று 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இராஜகோபுரம் கட்டுவதற்காக கோயில் நிர்வாகமும் அறங்காவலர் குழுவும் ஒன்றாக இணைந்து திருப்பணியை மேற்கொண்டார்கள். திருப்பணியை மேற்கொண்டு ஆறு மாத காலத்தில் ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் முடிக்கப்பட்டு, இந்த இரண்டாண்டு காலமாக கிடப்பிலே கிடக்கிறது. வருகிற பக்தர்கள் அந்தப் பணிகள் முடிவடையாததைப் பார்த்து மிக வேதனையோடு செல்கின்றார்கள். ஆகவே, மிகவும்*

பிரசித்திபெற்ற இந்தத் திருக்கோயிலுடைய திருப்பணியை மிக விரைவில் செய்து முடித்து, குடமுழுக்கு விழாவையும் செய்து முடிக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில் அந்தத் திருக்கோயிலுடைய பணி தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட நேரத்தில் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 28 நபர்களை உபயதாரர்களாகக்கொண்டு அந்தத் திருப்பணி தொடங்கப்பட்டது. பிறகு ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாக, ஏற்கெனவே இருந்த அறங்காவலர் குழுத் தலைவர் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய இயலாத காரணத்தாலும், மேலும் 28 நபர்களை மட்டும் வைத்துச் செய்தால் சரியாக இருக்காது என்ற அடிப்படையிலும் இப்போது திருத்திய மதிப்பீடாக ரூ.86.5 இலட்சம் மதிப்பீட்டில் 30 இலட்சம் ரூபாயை திருக்கோயில் நிதியிலிருந்தும், 50 இலட்சம் ரூபாயை நன்கொடை மூலமாகவும், அதேபோல திருப்பணி உண்டியல்மூலமாகவும் வசூலித்துச் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு மறு டெண்டர் கோரப்பட்டு, கடந்த 17-3-2008 ஆம் தேதியன்று ஆணையர் அலுவலகத்திற்கு உரிய விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவை ஆய்வு செய்யப்பட்டு வெகுவிரைவிலே ஆணை வழங்கப்பட்டு, வெகுவிரைவிலே பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற இந்தத் திருக்கோயிலுக்கு நாள்தோறும் பக்தர்கள் அதிகமாக வந்து செல்கின்றார்கள். அந்தப் பகுதியிலே போதுமான தண்ணீர் வசதியும், கழிப்பிட வசதியும் இல்லாமல் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே அதை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மேட்டுப்பாளையம் தொகுதிக்குப்பட்ட வன பத்திரகாளியம்மன் திருக்கோயில் பவானி ஆற்றினுடைய ஓடையிலே மிக அழகான, இயற்கை எழில்வாய்ந்த தோற்றத்திலே அமையப்பெற்றிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

2008 மே 6]

இந்தத் திருக்கோயிலின் பின்புறத்திலே பின் மண்டபம் கட்டுவதற்காகக் கடந்த காலத்திலே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் தொடங்கப்பட்டு, அந்தப் பணிகள் இன்னும் முடிவடையாமல் கான்கிரீட் தூண்கள் மட்டும் அமைக்கப்பட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கோயிலுக்கு தற்போது 10 கோடி ரூபாய்க்கு மேலாக நிதியாதாரம் இருக்கிறது. ஆகவே மிக அதிகமாக மக்கள் வந்து செல்கின்ற அந்தப் பகுதியிலே இந்தத் திருக்கோயிலினுடைய பின் மண்டபத்தை விரைவிலே கட்டிக் கொடுப்பதற்கும் கிராமப்புறத்திலே அமைந்திருக்கின்ற இந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் தங்கிச் செல்வதற்காகத் தங்கும் விடுதி கட்டிக் கொடுப்பதற்கும், மிக விரைவிலே இராஜ கோபுரம் ஒன்றை அமைத்துத் தருவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுடைய திருப்பணிகள் நடைபெறுகின்ற அதே காலகட்டங்களில், அந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

அதோடு, கோவை மாவட்டம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அந்த பின் மண்டபத்தை ரூ.20.7 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்கள்மூலமாகக் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இப்போது 40 சதவிகிதம் அளவிற்கு பணிகள் முடிவுற்றிருக்கின்றன. தொடங்கியவுடனேயே பணிகள் அனைத்தும் முடிய வேண்டும் என்று எதிர்பார்ப்பது உகந்ததல்ல. இப்போது 40 சதவிகிதப் பணிகள் அதிலே நடைபெற்றிருக்கின்றன. எஞ்சிய பணிகளை விரைவாகச் செய்வதற்கும் அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல; அந்தத் திருக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்ற காரணத்தாலும், அடிப்படை வசதிகள்

தேவை என்பதை உணர்ந்தும், ஏறத்தாழ 6½ இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலை ஒன்று அமைப்பதற்கான பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கு வந்து செல்லக்கூடிய சேவார்த்திகளுக்குத் தங்கும் அறை வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதுவும் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் ஒரு கருணை இல்லத்தை அங்கே அமைப்பதற்கு 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணி நடைபெறுகிறது. ரூ.15.2 இலட்சம் மதிப்பீட்டில் பொங்கல் மண்டபம் கட்டுவதற்கானப் பணிகள், 2008-2009 ஆம் ஆண்டிற்கானப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் அங்கே வரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான கழிவறை வசதிகளைச் செய்வதற்கு ரூ.4.98 இலட்சம் மதிப்பீட்டிலும், பெண் சேவார்த்திகள் உடை மாற்றும் அறை ரூ.4.8 இலட்சம் மதிப்பீட்டிலும் ஏராளமான பணிகள் அந்தத் திருக்கோயிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசித்திபெற்ற திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட ரூ.50 இலட்சம் நிதியில் வேலைகளைச் சரியாகச் செய்யாததால், பக்தர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை அகற்ற, அந்தப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகளில் தேக்கம் இருந்தால், அவற்றை விரைந்து நடத்துவதற்குப் பணிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள்.

திரு. மு. பரஞ்ஜோதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருக்கோயில் இந்திய அளவில் புகழ் பெற்ற திருக்கோயிலாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய

2008 மே 6]

ஆட்சிக் காலத்திலே ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் இராஜ கோபுரம் கட்டப்பட்டது. இப்பொழுது ஸ்ரீரங்கம் வடக்கு வாசலில் இராஜ கோபுரம் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

206—

உயர்நிலைப் பள்ளி

***7140—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்திடக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்பட்டால், விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும். தற்போது ஆரம்பப் பள்ளிகள் ஆரமபிக்கப்பட்டு, அவை முதலில் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, பின்னர் உயர்நிலைப் ப[illegible]ிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS